# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண். 31

## அறிவிப்புகள்
## 2021 – 2022

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண். 31

## அறிவிப்புகள்
## 2021 – 2022

**த. மனோ தங்கராஜ்**
**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2021

## 1. டிஜிட்டல் தமிழ்நாடு திட்டம் (Digital TN Program – DiTN)

விரைவான, கண்காணிக்கக்கூடிய, அணுகக்கூடிய மற்றும் பதிலளிக்கும் வகையிலமைந்த, வெளிப்படையான நிருவாகத்தைக் குடிமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, மின்னாளுகையைப் படிப்படியாக அரசின் அனைத்து மட்டங்களிலும் புகுத்தி, அதன்மூலம் முழுமையானதொரு அரசாங்கத்தை எய்திடும் வகையில் **" டிஜிட்டல் தமிழ்நாடு திட்டம்"** செயல்படுத்தப்படும். மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்ட மற்றும் அவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் அரசுத் துறைகளின் செயல்பாடுகள் படிப்படியாக மின்மயமாக்கப்படும்.

## 2. தமிழக அரசின் கொள்கை முடிவுகளுக்கான ஆதரவு அமைப்பு (TN Decision Support System – DeTN)

தரவுப் பகுப்பாய்வு மற்றும் இயந்திரக் கற்றல் மூலம் கொள்கை வகுத்தல் மற்றும் அதனைத் திறம்படச் செயல் படுத்துவதற்கான முடிவுகளை எடுப்பதற்கு உதவிடும் வகையிலமைந்த **"தமிழக அரசின் கொள்கை முடிவுகளுக்கான ஆதரவு அமைப்பு"** ஒன்று செயல்படுத்தப்படும். தரவுகளின் அடிப்படையில் அமைந்த ஆளுகையை " முதலமைச்சரின் தகவல்பலகை" வழியாக வழங்குவதற்கும், பல்வேறு தரவுத்தளப் பயனாளிகளின் தகவல்களை ஒருங்கிணைந்த வகையில் காண்பதற்கும் இந்த அமைப்பு உதவும்.

நடப்பு நிதியாண்டில் ரூ.10 கோடியும், அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு ரூ. 5 கோடியும் இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3. தமிழக அரசுத் துறைகளின் அலுவலகச் செயல்பாடுகளை மின்மயமாக்கும் திட்டம் (Departmental Office Process Digitization Program – DoTN)

அலுவல்கள் சார்ந்த அனைத்துச் செயல்முறைகளையும் மின்மயமாக்கிடும் வகையில் " தமிழக அரசுத் துறைகளின் அலுவலகச் செயல்பாடுகளை மின்மயமாக்கும் திட்டம்" ஒன்று அரசால் செயல்படுத்தப்படும். இது விரைந்து முடிவெடுப்பதற்கான செயல்திறனை மேம்படுத்த உதவும். குடிமக்களுக்கான அரசின் சேவைகளை, அவர்கள் நேரில் சென்று பெறவேண்டிய அவசியமில்லாமலேயே அச்சேவைகளை அவர்களுக்குப் படிப்படியாக வழங்கிடச் செய்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட இது உதவும். மேலும், காகிதப் பயன்பாட்டைக் குறைப்பதன் மூலம் மரங்கள் காக்கப்படவும், அதன் மூலம் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைத்திடவும் இது உதவும்.

இத்திட்டம் முதற்கட்டமாக தலைமைச் செயலகத்தில் இந்த ஆண்டுக்குள் செயல்படுத்தப்படும், இரண்டாவது கட்டமாக பிற அரசுத் துறை அலுவலகங்களில் செயல்படுத்தப்படும்.

## 4. தரவு மையக் கொள்கை (Data Centre Policy)

தரவு உள்ளூர் மயமாக்கல் தேவைகள், மின் வாணிபத்தின் வளர்ச்சி மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளை விரைவாகப் பூர்த்தி செய்திடும் வகையில், தரவு மையங்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன.

2019–2025–ஆம் ஆண்டு காலத்திற்குள், தரவு மையத்திற்கான ஆண்டு வளர்ச்சி விகிதம் 4 சதவீதத்திற்கும் மேல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிறந்த அமைவிடம், சிறந்த இணைப்பு வசதி மற்றும் உபரி மின் சக்தி ஆகியவற்றின் காரணமாக சென்னை நகரம் தரவு மைய முனையமாக வளர்ந்து வருகிறது. இத்துறையில் வளர்ச்சி, முதலீடு மற்றும் உயர்தர வேலைவாய்ப்பினை ஊக்குவித்திடும் வகையில், **"தரவு மையக் கொள்கை"** ஒன்று வெளியிடப்படும்.

## 5. உலகளாவிய திறன் மையக் கொள்கை (Global Capability Centre Policy)

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஆற்றல்மிக்க உலகளாவிய திறன் மையங்களை ஈர்க்கும் முக்கிய மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது. உலக அளவில் திறன் மையங்களை அதிகமாகக் கொண்டிருக்கும் முன்னணி நாடாக இந்தியா உள்ளது. இத்திறன் வளங்களைப் பெற்றுள்ள தமிழகம், இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, செயல் வல்லமையை மேம்படுத்துவதோடு, உயர்தர வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி, அதன் மூலம் தனது மதிப்பினை உயர்த்திட இயலும். உலகளாவிய திறன் மையங்களை ஈர்ப்பதன் மூலம், மாநிலத்தை உலகளாவிய திறன் மையங்களுக்கான முக்கிய முனையமாக மாற்றிடும் வகையிலமைந்த **"உலகளாவிய திறன் மையக் கொள்கை"** ஒன்று வெளியிடப்படும்.

## 6. மெய்நிகர் அருங்காட்சியகம் (Virtual Reality Museum)

தமிழ் இணையக் கல்விக்கழகம், தொல்பழங்காலம், பாரம்பரியம் மற்றும் வரலாற்றுச் சின்னங்கள், கலைப்பொருள் குறித்த ஆவணங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் கோயில்களின் விவரங்களைப் பராமரித்து வருகிறது. இவற்றின் தனிப்பயனாக்கம், உயர்தரப் பொருண்மை ஆகியவற்றைப் பூர்த்தி செய்ய, மேம்படுத்த மற்றும் அதிகரிக்க **"மெய்நிகர் அருங்காட்சியகம்"** ஒன்றைத் தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் அமைத்திடவும், அதனை இணையத்தில் வெளியிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இம்மெய்நிகர் அருங்காட்சியகம் மூன்று ஆண்டு காலத்திற்குள் ரூ.7.5 கோடி செலவினத்தில் உருவாக்கப்படும்.

## 7. உள்ளடக்கத் தமிழ் மின்நூலகம் (Inclusive Tamil Digital Library)

தமிழ் இணையக் கல்விக்கழகம், 25,000–க்கும் மேற்பட்ட புத்தகங்கள், பருவ இதழ்கள், ஓலைச் சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளைக் கொண்ட மின்நூலகத் தளத்தைப் பராமரித்து வருகிறது. இத்தளத்தின் உள்ளடக்கத்தைப் பார்வைக் குறைபாடு, இயக்கக் குறைபாடு, கற்றல் குறைபாடு, வாசிப்புக் குறைபாடு கொண்டவர்கள் மற்றும் முதியவர்கள் ஆகியோர் எளிமையாகப் பயன்படுத்தும் வகையில், அதனை ரூ. 1 கோடி செலவினத்தில் **" உள்ளடக்கத் தமிழ் மின்நூலகம்"** – ஆக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 8. அரிய ஒலி, ஒளி, ஒளிப்படம், புகைப்படங்கள் மற்றும் பிற வரலாற்றுப் படங்களை மின்னுருவாக்கம் செய்தல் (Digitization of Rare Audio, Video, Photographs and other Historical Images)

தமிழ் இணையக் கல்விக்கழகம், 53 இலட்சத்திற்கும் அதிகமான உள்ளடக்கப் பக்கங்களான அச்சிடப்பட்ட புத்தகங்கள், பருவ இதழ்கள், ஓலைச்சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள மின்நூலகத்தினைப் பராமரித்து வருகிறது. இவை சிதைவுறுவதற்கான ஆபத்துகள் இருப்பதால், அரிய ஒலி– ஒளி ஆவணங்கள், ஒளிப்படங்கள், புகைப்படங்கள் மற்றும் பிற வரலாற்றுப் படங்களை முதற்கட்டமாக ரூ. 1 கோடி செலவினத்தில் மின்னுருவாக்கம் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 9. யூமாஜின் – (UMAGINE) எனும் வருடாந்திர தொழில்நுட்பத் தலைமை உச்சி மாநாடு (Annual Technology Leadership Summit)

தமிழகம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான செயற்கை நுண்ணறிவு, இயந்திரக் கற்றல், பொருட்களின் இணையம், ஆளில்லா விமானம், ஆழ்நிலைத் தொழில்நுட்பம் ஆகியவற்றில் முன்னிலை வகிக்கத்தக்க ஆற்றலைப் பெற்றுள்ளது.

தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் மற்றும் அவை தொடர்புடைய வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் கருத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சிக்கான உகந்த இடமாகத் தமிழகத்தை முன்னிறுத்திட ஒருங்கிணைந்த முயற்சி அவசியமாகிறது. இத்துறைகளில் தமிழகம் பெற்றுள்ள வல்லமையைக் கொண்டாடவும்,

மேம்படுத்திடவும், இதில் சிறந்து விளங்கும் உலகளாவிய நிறுவனங்களுடன் இணைந்து, **"யூமாஜின்"** (UMAGINE) எனும் வருடாந்திர தொழில்நுட்பத் தலைமை உச்சி மாநாடு தமிழகத்தின் பல்வேறு சுற்றுலா நகரங்களில் நடத்தப்படவுள்ளது. முதலாவது மாநாடு சென்னையில் நடத்தப்படும்.

## 10. இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் (IT Parks in Tier II / III Cities)

தமிழகத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சியை ஊக்குவித்திடவும் மற்றும் பொருளாதார செழுமையை மென்மேலும் உயர்த்திடவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் படிப்படியாக அமைக்கப்படும்.

## 11. பயனாளிகளுக்கான ஒருங்கிணைந்த பார்வைத் தளம் (Comprehensive view of Beneficiaries)

தகவல் தொழில்நுட்பத்தின் ஆற்றலைப் பயன்படுத்தி, அரசுத் திட்டப் பயனாளிகளின் உண்மைத் தன்மையை மாநிலக் குடும்பத் தகவல் தொகுப்பு வாயிலாக அறிய உதவும் ஒற்றை ஆதாரத் தளமாக **"பயனாளிகளுக்கான ஒருங்கிணைந்த பார்வைத் தளம்"** திகழும். இது அரசுத் திட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதுடன், புதிய நலத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை அதிகரிக்கவும் உதவும்.

**த. மனோ தங்கராஜ்**
**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.